LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

46

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் அரையாண்டு சிறப்புக் கல்விமாணித் தேர்வு பகுதி - II – 2009/2010 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2011)

## EDUS 3103 முகாமைத்துவக் கோட்பாடுகளும் பிரயோகமும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஏதாவது மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (அ) ரெயிலர் ஒரு முகாமையாளர் பாடசாலை அதிபர் ஒரு தலைவர். இதனை ஆதாரமாகக் கொண்டு தலைவர், முகாமையாளர் ஆகியோர்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) தலைமைத்துவ வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் சாதகபாதகத் தன்மைகளை எடுத்துரைக்குக.

(09 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனத்தில் வேலைப் பகிர்வினால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் பிரதிகூலங்கள் என்பவற்றை உதாரணங்களுடன் ஆராய்க.

(08 புள்ளிகள்)

02. (அ) ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவத் தொழிற்பாடுகள் ஒவ்வொன்றையும் நிறைவு செய்வதற்கு தகவல் முறைமை எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிக் கருத்துரைக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) டக்ளஸ் மக்கிரகரின் Y கோட்பாடானது எவ்வாறு பாரம்பரியமான X கோட்பாட்டிலிருந்து வேறுபடுகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) ஹேர்ஸ்பேக் நன்கு வேலை செய்ய ஊக்குவிக்கும் காரணிகளைக் குறிப்பிடுவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

03.(அ) ஒரு அதிபர் தலைவராக மட்டுமன்றி முகாமையாளராகவும் செயற்ப வேண்டிய சூழ்நிலைகள் பாடசாலைகளில் காணப்படுகின்றன அவ்வாறு அதிபரிடம் காணப்பட வேண்டிய முகாமைத்து பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) பொதுக் கல்வித்திட்டத்தில் பாடசாலை முறைமை, அதிபரின் நிலை என்பன எவ்வாறு காணப்படுகின்றன என்பதனைப் பகுப்பாய் செய்க.

(09 புள்ளிகள்)

(இ) ஏபிரகாம் மாஸ்லோவின் மனிதத் தேவைகள் கோட்பாடு எவ்வா மக்கிரகலின் கோட்பாட்டிற்கு ஆதாரமாயமைகின்றது என்பன ஆராய்க.

(07 புள்ளிகள்)

04.(அ) "முகாமைத்துவச் செயற்பாட்டில் தொடரான தீர்மானம் செய் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களாகும்." இக்கூற்றி பொருத்தப்பாட்டினை நியாயப்படுத்துக.

(09 புள்ளிகள்)

(ஆ) ஒரு நிறுவன முகாமையாளர் கட்டுப்படுத்தலை மேற்கொள்ளு போது கவனிக்க வேண்டிய விடயங்களைச் சுருக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

(இ) ஹென்றி பயோல் நிருவாகத்தின் பொது உண்மைகளா குறிப்பிடும் விடயங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

(08 புள்ளிகள்)

05.(அ) பாடசாலையில் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியத அவசியத்தையும் கூடங்களின்போது கருத்திலெடுக்க வேண் விடயங்களையும் ஆராய்க.

(08 புள்ளிகள்)

(ஆ) எல்ரன் மாயோ ஹோத்தோன் பரிசோதனையின் மூலம் முன்வை முகாமைத்துவம் சார் கருத்துக்களை ஒரு நிறுவனத் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு எவ்வாறு பயன்படுத்தல என்பதை விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) ஒரு பாடசாலையின் வினைத்திறன் பரிமாணங்கள் பல்வே காரணிகளில் தங்கியுள்ளன. அவ்வாறான காரணிகளை ஆராய்க

(08 புள்ளிகள்)

06.(அ) "நவின முகாமைத்துவம் சமூகத்தின் தரமான வாழ்க்கைக்கு வ சொல்லக் கடமைப்பட்டுள்ளது." இக்கூற்றின் தாற்பரியத் இன்றைய சமூக நிறுவனங்களின் முகாமைத்துவச் செயற்பாடுக மையமாகக் கொண்டு ஆராய்க.

(13 புள்ளிகள்)

(ஆ) ஒரு பாடசாலைத் தலைவரான அதிபர் மின்ஸ்பேக் தலைமைத்துவ வகிபங்கினைப் பின்பற்றி எவ் செயற்படுகின்றார் என்பதனை உதாரணங்கள்மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)